இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 29 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆவணி 23 – திங்கள்கிழமை 08 செப்டம்பர் 2025 – திருச்சி ★★ 16 பக்கங்கள்

Established: 10.8.1942 - Volume: 84 - Issue 29: Thiruvalluvar Year - 2056 - Aavani 23 - Monday 08 September 2025 - Trichy ★★ 16 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் இலண்டன் நகரில், இங்கிலாந்தை தலைமையிடமாகக் கொண்ட இந்துஜா குழுமம், மின்சார வாகனங்களுக்கான செல் மற்றும் பேட்டரி உற்பத்தி, BESS (பேட்டரி எரிசக்தி சேமிப்பு அமைப்பு) மற்றும் மின்சார சார்ஜிங் நிலையங்களுக்கான வணிகங்களில் 7500 கோடி ரூபாய் முதலீட்டில் 1000–க்கும் மேற்பட்ட நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் தமிழ்நாடு அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது. இந்த நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் டாக்டர் பு.உமாநாத், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, இந்துஜா குழுமத்தின் தலைமை நிர்வாகி தீரஜ் இந்துஜா, இந்துஜா குழுமத்தின் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் இலண்டன் நகரில், அஸ்ட்ரா ஜெனெகா (Astra Zeneca) நிறுவனம் சென்னையில் உள்ள அதன் உலகளாவிய கண்டுபிடிப்பு மற்றும் தொழில்நுட்ப மையத்தை (GITC) 176 கோடி ரூபாய் முதலீட்டில் விரிவாக்கம் செய்வது குறித்து புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது. இந்த நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் டாக்டர் பு.உமாநாத், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, அஸ்ட்ரா ஜெனெகா நிறுவனத்தின் இந்தியாவிற்கான தலைவர் பிரவீன் அக்கினேபள்ளி, வணிக டிஜிட்டல் மற்றும் ஐ.டி. தலைவர் (சர்வதேசம் மற்றும் ஜப்பான்) நிக் பாஸி மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### 17,613 நபர்களுக்கு வேலைவாய்ப்பு

# தமிழ்நாட்டிற்கு மொத்தம் ரூ. 15,516 கோடி முதலீடுகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இங்கிலாந்து - ஜெர்மனி பயணத்தால் ஈர்ப்பு!

**லண்டன், செப்.8-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் இங்கிலாந்தை தலைமையிடமாக கொண்ட இந்துஜா குழுமத்துடன் ரூ. 7,500 கோடி முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இது தமிழ்நாட்டின் மின்சார வாகன சுற்றுச்சூழல் அமைப்பை கணிசமாக மேம்படுத்தும் முதலமைச்சர் அவர்களின் இங்கிலாந்து மற்றும் ஜெர்மனி பயணத்தில் தமிழ்நாட்டிற்கு மொத்தம் ரூ. 15,516 கோடி முதலீடுகள் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் ஈர்க்கப்பட்டுள்ளது.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான TN RISING ஐரோப்பா முதலீட்டு சந்திப்புகளின் போது, லண்டனில் இங்கிலாந்தை தலைமையிடமாக கொண்ட இந்துஜா குழுமம், மின்சார வாகனங்களுக்கான செல் மற்றும் பேட்டரி உற்பத்தி, BESS (பேட்டரி எரிசக்தி சேமிப்பு அமைப்பு) மற்றும் மின்சார சார்ஜிங் நிலையங்களுக்கான வணிகங்களில் 7500 கோடி ரூபாய் முதலீடு செய்ய தமிழ்நாடு அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இதன் மூலம் மின்சார வாகன சுற்றுச்சூழல் அமைப்பை விரிவுபடுத்தி 1,000-க்கும் மேற்பட்ட நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாகும்.

மேலும், அஸ்ட்ராஜெனெகா நிறுவனம் (AstraZeneca) இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாட்டில் மூன்றாவது தொழில் முதலீட்டை அறிவித்துள்ளது. சென்னையில் உள்ள அதன் உலகளாவிய கண்டுபிடிப்பு மற்றும் தொழில்நுட்ப மையத்தை (GITC) 176 கோடி ரூபாய் முதலீட்டில் விரிவாக்கம் செய்திடவுள்ளது.

இதன்மூலம், தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்கான தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இங்கிலாந்து மற்றும் ஜெர்மனி நாடுகளுக்கான பயணத்தால் தமிழ்நாடு பெற்ற மொத்த முதலீடு 15,516 கோடி ரூபாயாகும். இதன்மூலம் 17,613 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்தை தலைமையிடமாக கொண்ட இந்துஜா குழுமத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தம், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இங்கிலாந்து பயணத்தின் மிக முக்கியமான முன்னெடுப்பாகும். இந்தக் குழுமம், தமிழ்நாட்டின் மின்சார வாகன சுற்றுச்சூழல் அமைப்பில் அதன் பல்வேறு நிறுவனங்கள் மூலம் முதலீடுகளை திட்டமிட்டு, நிலையான இயக்கம் மற்றும் பேட்டரி தொழில்நுட்பங்களுக்கான உலகளாவிய ஹாட்ஸ்பாட்களில் ஒன்றாக தமிழ்நாட்டை மேம்படுத்துகிறது.

அஸ்ட்ராஜெனெகாவின் GITC, அஸ்ட்ராஜெனெகாவின் உலகளாவிய செயல்பாடுகளில் முக்கிய பங்கு வகிக்கிறது, இது அதிநவீன ஆராய்ச்சி, செயற்கை நுண்ணறிவால் இயக்கப்படும் கண்டுபிடிப்பு மற்றும் மருத்துவ சேவைகள் வழங்குவதில் தொழில்நுட்ப மாற்றத்தை செயல்படுத்துகிறது. இந்நிறுவனம் இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாட்டில் அதன் மூன்றாவது முதலீட்டினை செய்துள்ளது. இது மாநிலத்தின் திறன் வளர்ச்சி மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான நிர்வாகத்தின் மீது உள்ள வலுவான நம்பிக்கையை எடுத்துக்காட்டுகிறது.

இந்த முதலீடுகள் இங்கிலாந்தில் முதலமைச்சர் அவர்களின் சந்திப்புகளின் போது வெளியிடப்பட்ட முந்தைய அறிவிப்புகளை அடிப்படையாகக் கொண்டவை ஆகும். இது GCC-க்கள், உற்பத்தி, ஐவுளி தொழில்நுட்பம் மற்றும் வடிவமைப்பு கல்வி போன்ற துறைகளில் 1,293 வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் 820 கோடி ரூபாய் முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இங்கிலாந்து நாட்டு முதலீட்டாளர்கள் சந்திப்புகளுக்கு முன்னதாக, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான குழு ஜெர்மனியிடமிருந்து 26 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் 7,020 கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்த்துள்ளது. இதன்மூலம் 15,320 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவை விண்வெளி, விரிவான தொழில்நுட்பம், ரயில்வே, ஆட்டோமொடிவ் மற்றும் மின்னணுவியல் உள்ளிட்ட முக்கிய துறைகளை உள்ளடக்கியது ஆகும்.

இந்த நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் டாக்டர் பு.உமாநாத், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### இந்திய அரசியலமைப்பையே வடித்துத் தந்த

## அண்ணல் அம்பேத்கரின் இலண்டன் இல்லத்தை பார்வையிட்டேன்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் உணர்ச்சிமிகு பதிவு!


**இலண்டன், செப்.8-**

**இந்திய அரசியலமைப்பையே வடிவமைத்த அண்ணல் அம்பேத்கர் இலண்டன் மாநகரில் பொருளியல் பள்ளியில் படிக்கும்போது தங்கி இருந்த இல்லத்தை பார்வையிட்டது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில், அது உணர்வெழுச்சி மிகுந்த தருணமாக இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.**

அண்ணல் அம்பேத்கர் அவர்கள் இலண்டனில் படிக்கும்பொழுது தங்கியிருந்த இல்லத்தை பார்வையிட்டது குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு: -

**பாபாசாகேப் அண்ணல் அம்பேத்கர் அவர்கள் இலண்டன் பொருளியல் பள்ளியில் (LSE) படிக்கும் பொழுது, தங்கியிருந்த டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் இல்லத்தைப் பார்வையிடும் வாய்ப்பினைப் பெற்றேன்.**





**அந்த இல்லத்தின் அறைகளினூடே நடந்து செல்கையில் பெரும் வியப்பு என்னுள் மேலோங்கியது. இந்தியாவில் சாதியின் பேரால் ஒடுக்கப்பட்ட ஓர் இளைஞன், இங்குதான் தனது அறிவால் வளர்ந்து, இலண்டனில் அனைவரது மரியாதையையும் பெற்று, பின்னர் இந்தியாவின் அரசியலமைப்பையே வடித்துத் தரும் நிலைக்கு உயர்ந்தார்.**

**குறிப்பாக, தந்தை பெரியாரும், அண்ணல் அம்பேத்கரும் உரையாடும் வரலாற்றுச் சிறப்புமிக்க புகைப்படத்தை அங்கு கண்டது மிகவும் சிலிர்ப்பூட்டியது.**

**இப்படியொரு உணர்வெழுச்சி மிகுந்த தருணம் வாய்க்கப் பெற்றதற்காக மகிழ்ச்சி அடைகிறேன்! ஜெய் பீம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## குடியரசு துணைத் தலைவர் தேர்தல்!

### நாளை நடைபெறுகிறது!

*புதுடெல்லி, செப். 8 -*

*குடியரசு துணைத் தலைவர் தேர்தல் தொடர்பாக, இன்று (8 ஆம் தேதி) இந்தியா கூட்டணிக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆலோசனை மேற்கொள்ள உள்ளனர்.*

*குடியரசு துணைத் தலைவர் தேர்தல் நாளை (9ம் தேதி) நடைபெறுகிறது. இந்தியா கூட்டணி சார்பில் உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி சுதர்சன் ரெட்டி போட்டியிடுகிறார்.*

*இந்நிலையில், குடியரசு துணைத் தலைவர் தேர்தல் தொடர்பாக, இன்று (8ம் தேதி) இந்தியா கூட்டணி கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆலோசனை மேற்கொள்ள உள்ளனர்.*

*இந்தியா கூட்டணி உறுப்பினர்கள் நாடாளுமன்ற மைய மண்டபத்தில் கூடி வாக்களிக்கும் நடைமுறை உள்ளிட்ட அம்சங்கள் குறித்து ஆலோசனை நடத்த உள்ளனர்.*

*குடியரசு துணைத் தலைவர் தேர்தலில் நாடாளுமன்ற இரு அவைகளின் உறுப்பினர்கள் வாக்களிப்பார்கள். மக்களவையில் தற்போது 542 உறுப்பினர்கள் உள்ள நிலையில், ஒரு தொகுதி காலியாக உள்ளது. மாநிலங்களவையில் 239 உறுப்பினர்கள் உள்ள நிலையில், ஜம்மு, காஷ்மீர் மாநில உறுப்பினர்கள் 4 பேர் உள்பட 6 உறுப்பினர்கள் இடம் காலியாக உள்ளது. இரண்டு அவைகளிலும் சேர்த்து 781 உறுப்பினர்கள் வாக்களிக்க உள்ளனர்.*

*நாடாளுமன்ற வளாகத்தில் தேர்தல் அலுவலகம், வாக்களிக்கும் அறை அமைக்கப்பட்டுள்ளது.*

*நாளை (செப். 9) காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறும். அடுத்த ஒரு மணி நேரத்தில் வாக்குகள் எண்ணும் பணி தொடங்கும் இரவுக்குள் தேர்வு முடிவுகள் அறிவிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.*